## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தம்) சட்டம்

---

*[1987, திசெம்பர் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1987, திசெம்பர் மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : சதம் 75*

1987 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தம்) சட்டம்

[1987 திசெம்பர் 24 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 6/87
1876

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது, 1987 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தில் 8ஔ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான, (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினுள்ள 8ஓ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஔ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

"வீதவரிகளின் குறைப்பு.

8ஔ. (1) பிரிவு 8ஓ என்பதன்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமொன்றின் கீழும் அதற்கிணங்கவும் அபிவிருத்தி செய்வதற்கான ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் கட்டடம் நிருமாணிக்கப்படுமிடத்து, அப்போது, மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்திலும், நகரசபைகள் கட்டளைச் சட்டத்திலும் உள்ளது எது எப்படியிருப்பினும்—

(அ) அத்தகைய நிருமாணம் தொடர்பில் 8ஓ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்படும் சான்றிதழின் தேதியிலிருந்து கணக்கிடப்படும் ஐந்து ஆண்டுக் காலத்துக்கென, அத்தகைய ஏதேனும் கட்டளைச்சட்டத்தின்கீழ் அத்தகைய கட்டடத்தின்மீது மதிப்பிடப்பட்டதான வீதவரிகளின் எண்பதுசத வீதக் குறைப்பொன்று, விடயத்துக்கேற்றவாறு மாநகரசபையினால் அல்லது நகரசபையினால் அனுமதிக்கப்படல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலம் முடிவடைந்ததிலிருந்து கணக்கிடப்படும் ஐந்து ஆண்டுகளைக்கொண்ட மேலதிகக் காலத்துக்கென அத்தகைய வீதவரிகளின் ஐம்பதுசத வீதக் குறைப்பொன்று, விடயத்துக்கேற்றவாறு மாநகரசபையினால் அல்லது நகரசபையினால் அனுமதிக்கப்படல் வேண்டும்.

2—எ 100315—2,830(11/87)

(2) பிரிவு 8ஓ என்பதன்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின்கீழும் அதற்கிணங்கவும் அபிவிருத்தி செய்வதற்கான ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் கட்டடம் மீளபிவிருத்தி செய்யப்படுமிடத்து, அப்போது, மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்திலும் நகரசபைகள் கட்டளைச் சட்டத்திலும் உள்ளது எது எப்படியிருப்பினும், அத்தகைய மீளபிவிருத்தி தொடர்பில் 8ஓ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்படும் சான்றிதழின் தேதியிலிருந்து கணக்கிடப்படும் ஐந்தாண்டுகளைக்கொண்டவொரு காலத்துக்கென, அத்தகைய ஏதேனும் கட்டளைச் சட்டத்தின்கீழ் மீளபிவிருத்தி செய்யப்பட்ட அத்தகைய கட்டடத்தின் மீது மதிப்பிடப்பட்டதான விதவரிகளின் ஐம்பது சதவீதக் குறைப்பொன்று, விடயத்துக்கேற்றவாறு மாநகரசபையினால் அல்லது நகரசபையினால் அனுமதிக்கப்படல் வேண்டும்".

2 ஆம் பிரிவின் கடந்தகாலத்தையும் உள்ளடக்கும் பயன்.

8. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தமானது, 1979 நவம்பர் 12 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதென எல்லா நோக்கங்களுக்குமாகக் கருதப்படல் வேண்டும்.